# மாகோ பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூலை 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்தோபர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாகோ பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 37,789,647 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,254,379 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 7,958,594 ஆக இருந்தது

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரில் மிகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு இல. 49 இன் மூலம் கடன்பட்டோர் ரூபா 15,028,377 தொகையும் நாட்குறிப்பு இல. 44 இன் மூலம் கடன்கொடுத்தோர் ரூபா 13,755,685 தொகையும் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முற்கொடுப்பனவின் கீழ் முற்பணமாக பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,098,770 தொகை தீர்க்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்டதுடன் அதற்கான பட்டோலைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டின் இறுதியில் வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 53,722 பெறுமதியான 13 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,856 | 2,908 | 1,828 |
| (ii) | வாடகை | 6,395 | 6,633 | 213 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 216 | 226 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 38,365 | 24,901 | 15,748 |

**2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,483,966 ஆகும்.

**2.3.3 சபையின் சொத்துக்களை வாடகைக்கு விடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் சொத்துக்களை வாடகைக்கு விடுதல்களில் 1982 தொடக்கம் 2009 வரை 12 சந்தர்ப்பங்களின் கீழ் அறவிட வேண்டியிருந்த ரூபா 256,517 தொகையான நிலுவை வாடகை மற்றும் 3 சந்தர்ப்பங்களில் ரூபா 37,131 தொகையான கடைவாடகை என்பன காணப்பட்டதுடன் வருமானப் பதிவேடுகளில் இதில் ரூபா 256,517 இற்குரிய விபரங்களை இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) ஆகக் குறைந்த கேள்வி ரூபா 328,051 தொகையான 12 சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது வாடகைக்கு விடமுடியாதிருந்ததுடன் ரூபா 144,708 தொகையில் வாடகைக்கு விடப்பட்டிருந்த மாகோ 2 ஆம் இலக்க மீன் கடை வாடகையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டதன் பின்னர் 2011 மார்ச் மாதம் தொடக்கம் பணம் அறவீடு செய்யப்பட்டிராததுடன் மீளவும் வாடகைக்கு விட முடியாதிருந்தது.

**2.3.4 மோட்டார் கிரேடரை வாடகைக்கு விடல்**

2010 மார்ச் மாதத்தின் போது ரூபா 16,446,400 தொகைக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்த மோட்டார் கிரேடர் மீற்றர் மணிக்கு (வரியுடன்) ரூபா 2,576 வாடகையில் தினமொன்றிற்கு ஆகக் குறைந்தது 6 மீற்றர் மணியில் 25 நாட்களுக்கு இயந்திரத்திற்கான மாதாந்த வாடகைக் கட்டணமாக ரூபா 386,400 தொகை ஆகக் குறைந்த கட்டணம் செலுத்தும் நிபந்தனையின் அடிப்படையில் பாதெனிய அனுராதபுர வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் முகாமையாருடன் 2010 யூலை 6 ஆந் திகதி ஒரு வருடத்திற்கு உடன்படிக்கை சைச்சாத்திடப்பட்டு 2011 யூன் மாதத்தில் மீள அது புதுப்பிக்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 மார்ச் மாதம் மீற்றர் மணி 161.10 ஈடுபடுத்தப்பட்டமைக்காக உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 414,994 தொகை பட்டியலிட வேண்டிய போதிலும் ரூபா 368,081 தொகை பெறப்பட்டிருந்தது.

(ii) உரிய உடன்படிக்கையின் 9 ஆவது நிபந்தனையின் பிரகாரம் மாதாந்த வாடகைக் கட்டணமாக நாளொன்றிற்கு 06 மணித்தியாலங்கள் படி 25 நாட்களுக்காக ரூபா 386,400 தொகையான வாடகைக் கட்டணம் மாதாந்தம் வைப்பாக வாடகையாளரினால் செலுத்த வேண்டிய போதிலும் சபையினால் பட்டியல் தயாரிக்கும் போது இந்த நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளவாறாக அந்தந்த மாதங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட மணித்தியால எண்ணிக்கை அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2010 யூலை தொடக்கம் 2011 யூன் வரையான காலத்தில் ரூபா 1,073,323 தொகை குறைவாக வாடகைக் கட்டணம் பட்டியல் செய்யப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 97,500 பெறுமதியான 30 குப்பை போடும் பாத்திரங்களும், 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 19,320 பெறுமதியான 8 கூட்டுப்பசளை பாத்திரங்களும் மற்றும் ரூபா 9,250 பெறுமதியான 10 நுளம்பு வலை பெட்டிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உறுப்பினர்களின் உத்தேசித் திட்டங்களை அமுல்படுத்துவதன் கீழ் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2447 கதிரைகளில் 1660 கதிரைகள் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆகஸ்ட் வரையிலும் ரூபா 457,592 பெறுமதியான 787 கதிரைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நேர்க்கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மாகோ பஸ்நிலைய நிர்மாண வேலைகள் 2010 ஆண்டு தொடக்கம் காணப்படுகின்ற இருப்பு மீதி 541,322 ஆக இருந்ததுடன் பின்னர் 2010 யூலை 10 ஆந் திகதி இந்நிர்மாண ஒப்பந்தத்தின்

அடிப்படையில் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் உரிய இறுதியிருப்பை ஒப்பந்தகாரருக்குக் கையளிப்பதற்கோ அல்லது சபைக்கு பெறுவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2011 நவம்பர் மாத தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கையின் பிரகாரம் இதில் எஞ்சிய இருப்பாக ரூபா 57,888 இருப்பு மாத்திரம் காணப்பட்டதுடன் அந்த இருப்பு 2012 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் 10 பதவிப் பெயர்களுக்குரிய 17 ஊழியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இவ் வெற்றிடம் 10 வருடங்களை விட அதிக காலமாக காணப்படுவதுடன் அங்கீகரிக்கப்பட்ட 3 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் 2 பதவிகளும், 3 வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவிகளில் 1 பதவியும், 5 நூலகர் பதவிகளில் 3 பதவியும் மீளாய்வாண்டு வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன. 2012 செப்தெம்பர் 26 ஆந் திகதிய பிரதேச சபை தலைவரின் விளக்கமளித்தல்களின் பிரகாரம் உரிய ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டிருந்தமையினால் இவ்வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு முடியாதிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்பின் பதவியான செயலாளர் பதவி நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக பதில் கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2011 ஏப்ரல் 27 ஆந் திகதி தொடக்கம் அந்த பதவிக்காக வாரியபொல பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்ட செயலாளரினால் வாரத்திற்கு 2 நாட்கள் பதில் கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 3 நூலகத் தொழிலாளர்கள் அங்கீகரிக்கப்பட்டடிருந்த போதிலும் அதற்காக 4 நிரந்தர ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே உள்ளூராட்சித் திணைக்களத்தினால் சம்பள மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் 10 உத்தியோகத்தர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. சபையில் 4 ஊழியர்கள் தாம் சேர்க்கப்பட்ட பதவிகளுக்குப் புறம்பாக வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 4 நாட்கூலி காவலாளிகள், 4 நாட்கூலி நூலகத்

தொழிலாளர்கள் என மொத்ததமாக 8 ஊழியர்கள் சபையினால் சம்பள செலுத்தும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் அறிக்கையின் பிரகாரம் காரியாலய உதவியாளர் பதவியில் 2 பேரும், காரியாலய தொழிலாளர் பதவிகளில் 2 பேரும் காணப்பட்டதுடன் சம்பள மீளளிப்பு கோரும் போது காரியாலய உதவியாளர்கள் காண்பிக்கப்பட்டு 2 தொழிலாளர்கள் பதவிகளுக்காகவும் சம்பள மீளளிப்புப் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே சம்பள மீளளிப்பு பெற்ற நிரந்தர தொழிலாளர் பதவிகளுக்குரிய விபரங்கள் நிரந்தர பதவியணியினர்களின் விபரங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 நவம்பர் மற்றும் 2011 பெப்ரவரி காலபப்பகுதியில் சேவை உடன்படிக்கையின் அடிப்படையில் 13 பேர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சேவைக்காலம் 2011 ஆகஸ்ட் மாதத்தின் போது முடிவடைந்திருந்த போதிலும் மீள சேவை உடன்படிக்கை புதுபிக்கப்படாமல் அவர்களை சேவையில் ஈடுபடுத்தி சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. 2012 செப்தெம்பர் 26 ஆந் திகதி பிரதேச சபைத் தலைவரின் விடய விளக்கமளித்தல்களின் பிரகாரம் புதிய உடன்படிக்கைக்கு உடன்படாமல் காட்டப்பட்டிருந்த அறிவுறுரைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததாகக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) தொழிலாளர், காவலாளி போன்ற பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 58 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் கீழ் 43 பேர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்த போதிலும் அமைய, நாட்கூலி அடிப்படையில் சபை நிதியத்திலிருந்து சம்பளம் பெறுகின்ற 21 பேர்கள் மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் மற்றும் மாகோ பிரதேச சபையின் தலைவர் ஆகியோருக்கிடையே சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக ரூபா 3,871,132 பெறுமதியான உடன்படிக்கை 2011 சனவரி 04 அன்று கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(I) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட உடன்படிக்கைக்காக சபையின் பொதுவான

இலட்சனை இடப்பட்டிராததுடன் செயற்திட்டத்தின் சகல வேலைகளும் 2011 ஏப்ரல் 04 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமென மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் 2.23 ஆம் பிரிவில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய 20% முற்பணத் தொகையாயன ரூபா 774,226 தொகை சபைக்கு கிடைத்திருந்த போதிலும் 2011 யூன் 30 ஆந் திகதி வரையில் அத்தொகை வேலைக் கணக்கில் வைப்பிடப்பட்டிருந்தது.

(II) உரிய நிர்மாணச் செயற்பாடுகளுக்காக 2011 யூலை 22 ஆந் திகதி செய்திப்பத்திரிகையின் ஊடாக திறந்த கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் கேள்விக்குரிய ஒப்பந்தகாரர் ஒருவராக இருந்ததுடன் 2011 செப்தெம்பர் 27 ஆந் திகதி கூடப்பட்டிருந்த மதிப்பீட்டுக் குழுவினால் ''பரவலாக'' அறிவித்தல் செய்யப்படாமையினால் அதுவும் நிராகரிக்கப்பட்டு மீளவும் பொறியியல் திணைக்களத்தில் பதிவுசெய்திருந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட கேள்விகள் கோரப்பட்டிருந்ததுடன் அதற்கான கேள்வி மேற்கூறப்பட்ட நிராகரிக்கப்பட்ட கேள்விதாராக இருந்ததுடன் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்ட கூறுவிலையான ரூபா 3,982,801 கேள்விப் பெறுமதியாக இருந்த போதும் மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சின் அடிப்படையில் ரூபா 3,803,016.08 இற்கு ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1988 இன் பிரதேச சபைகள் விதிக்கோவையின் விதி இல. 218 இன் பிரகாரம் சபையில் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 30,578,638 தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் காலக்கிரமமாக மெய்மையாய்விற்கு உட்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அறிக்கையிடப்பட்ட தொலைந்து போனதாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 20,207 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக கணக்காய்வுத் திகதி வரையிலும் (2012 ஆகஸ்ட்) தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளுராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப்

பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,534,989 ஆகக் காணப்பட்டது. அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணையாக ரூபா 11,193 படி அந்த நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறவிடல்கள் எந்த ஊழியர்களுக்கானது என்பதை சபை அறிந்திருக்கவில்லை.

## 2.8 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டின் மூலம் மயான நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 72,000 தொகையும், விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 100,000 தொகையும், தாய், சேய் நலன்களுக்காக ரூபா 50,000 தொகையும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்தச் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான வீதி முறைமையினை ரூபா 9,586,816 தொகை செலவிடப்பட்டு மீளாய்வாண்டில் பராமரிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச சபைக்குச் சொந்தமான 12 மயான நிலங்களுக்காக மீளாய்வாண்டின் போது 600,000 பராமரிப்புச் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தன.

(இ) நிறுவனத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன காணப்படவில்லை. மீளாய்வாண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அக் குழுக் கூட்டம் ஒரு சந்தர்ப்பத்தில் கூடப்பட்டிருந்தது. அவ்வாறே உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்